அசோக வாசகம்

முதற் புத்தகம்

ஆசிரியர்

A. V. TYAGARAJAN, M.A., L.T.,
RETIRED DISTRICT EDUCATIONAL OFFICER

AND

T. V. CHENGALVARAYA MUDALIYAR,
RETIRED PROFESSOR IN TAMIL, ST. JOSEPH'S COLLEGE,
BANGALORE


அகில இந்திய பதிப்பகம்

...ளம், வேலூர், பெங்களூர்.

1953 [விலை அணா 4

முதற் பதிப்பு 1953

அகில இந்தியப் பதிப்பகம்
மல்லேசுவரம்,—பெங்களூர்
வேலூர்—வட ஆற்காடு ஜில்லா
கும்பகோணம்—தஞ்சாவூர் ஜில்லா



Printed at The Rayan Press Madras—1.

முகவுரை


உலகம் புகழும் ஒப்பிலா மன்னர் **அசோகர்.** அவர் இணையற்ற வீரர்; தமிழ் நாடு தவிர பாரத நாடு முழுவதையும் தன்னடிப் படுத்தியவர்; ஆயினும் தமிழ் நாட்டு மன்னரிடத்துப் பெருமதிப்பும் பேரன்புங் கொண்ட பெரு நண்பர். அவருடைய தரும சக்கரமே உரிமையுற்ற இந்நாட்டுக்குரிய அருமைச் சின்னமாம்.


வடநாடு தென்னுடு என்றும், தாய்மொழி பிறமொழி யென்றும், சிலரிடத்தில் வேற்றுமை மாறுபாடு தோன்றும் இக்காலத்தில், ஒற்றுமை நயம் பரப்ப முயல்வது அறிவுடைமைக்கழகாம். அவ்வொற்றுமையும் இளமக்களின் இளம் உள்ளத்தில் பதியுமாயின், வருங் காலத்தில் ஒற்றுமை மரம் ஓங்கி உயர்ந்து தழைத்துப் பரவித் தண்ணிழல் தரும். இதற்கு **அசோக** மன்னரின் பெயர் இன்றியமையாதது. எனவே, அம்மன்னர் நினைவாக "**அசோக வாசகம்**" என்ற ஒரு வாசக வரிசை வெளிவருகின்றது.


ஆகவே அரசாங்கமும் ஆசிரியர்களும் அன்புடன் "**அசோக வாசக**" வரிசையை இளம் பிள்ளைகளுக்குப் பாடமாக ஏற்று ஆதரவளிப்பார்களாக.

இவ்வரிசையில், இது முதல் நூலாகும். இளம் பிள்ளைகளுக்கு எழுத்து முதலியவற்றைப் புகட்டும் முறைகள் அவரவர் இயல்புக்கும் கருத்துக்கும் பொருந்தியவாறு பலவாக மாறுபட்டுள்ளன. அன்றியும் கல்விகற்கப் புகும் இளங் குழந்தைகள் உள நிலையும்


இவை என்ன?







இவை என்ன?



பறவைகள்


கோழி


கொக்கு


கிளி


புரு


வாத்து


மயில்


காகம்


குருவி


கருடன்

மிருகங்கள்


ஆடு


பசு


எருமை


நாய்


பூனை


குதிரை



குரங்கு


புலி


யானை

அசோக வாசகம்

முதற் புத்தகம்





படம்

படம் பட்டம்

மடம் மட்டம்

ட ப ம ம்





பம்பரம் பழம்

பழம் ரம்பம்

மரம் டம்பம்


ரப்பர் மழமழ

பழ மரம்

மரப் பம்பரம்

ர ழ

ர் ழ்



சக்கரம்




தச்சன்


சரம்	சட்டம்
கதர்	கம்பம்
பதர்	கட்டம்
பதம்	கன்னம்

பழ ரசம்

படச் சட்டம்

ச	க	த	ன
ச்	க்	த்	ன்





ந க ம்　　　　ர த ம்

நகரம்　　　　பந்தம்

கந்தன்　　　　கம்பர்


தந்தம்　　　　பழக்கம்


பக்கம்　　　　பதக்கம்

மரச் சட்டம்

தகரப் பட்டம்

ந　　　　ந்







மு ற ம்	மு ய ல்
ற	ய
கலம்	கப்பல்
பலம்	கலயம்
பயம்	கம்மல்
மலர்	கலசம்

குள்ள முயல்
நல்ல பழக்கம்
மலர் சரம்

ற ய ல

ற் ய் ல்





கங்கணம் வட்டம்

ங் வ

சணல் சங்கம்

பணம் பந்தல்

வயல் தங்கம்

மணல் சன்னல்

ரத வடம்


மரச் சன்னல்

நல்ல மணம்

ண ங வ

ண் ங் வ்






மஞ்சள் மத்தளம்

ஞ ள

வளம்	கஞ்சம்
மகள்	பஞ்சம்
கடல்	மக்கள்
களம்	வண்டல்

கல் மண்டபம்
வண்டல் மண்
நல்ல வயல்

ஞ ள
ஞ் ள்



கோர்வையாகப் படக் காட்சியை வருணித்து அதிலடங்கிய கதையைச் சொல்லி, குழந்தைகளை இன்புறச் செய்யவேண்டும். பிறகு, அக்கதையைத் தானே சொல்லுமாறு, ஒவ்வொரு குழந்தையையும் பழக்க வேண்டும்.

பயிற்சி


படி :

ஆடு	கோழி	கப்பல்
பசு	வாத்து	வண்டி
பூனை	கருடன்	விசிறி
நாய்	மயில்	அம்மி
நரி	காகம்	சிப்பு
படம்	தச்சன்	பம்பரம்
பழம்	மஞ்சள்	சக்கரம்
மரம்	வட்டம்	கங்கணம்
நகம்	சன்னல்	மத்தளம்
ரதம்	கலயம்	புத்தகம்

சேர்த்துப் படி

க	ட	த
கா க ம்	ப ட ம்	ர த ம்
நா — ம்	ம — ம்	ம — ம்
பா — ன்	வ — ம்	ப — ம்
ண	ல	ய
ப ண ம்	வ ல ம்	வ ய ல்
ம — ம்	க — ம்	ந — ம்
ம — ல்	ந — ம்	ப — ம்





அணில் கப்பல்

அ க

அன்னம் கன்னம்

அண்ணன் கண்ணன்


அப்பம் வர்ணம்

அரசன் சந்தனம்

அரச மரம்

நல்ல சந்தனம்

மஞ்சள் வர்ணம்







ஆடு காகம்

ஆ (ா) கா (ா)

கால்	காலம்	ஆட்டம்
வால்	வாரம்	ஆகாயம்
பால்	பாலம்	பாயசம்
நாய்	நாகம்	பானகம்

ஆல மரம்	பாரத மாதா
பால் சாதம்	பால் பாயசம்
நாய் வால்	மரப் பாலம்






இலை   கிளி


இ   கி

கிழவி	இஞ்சி	இந்தியா
மயில்	விசிறி	மந்திரி
கிண்டி	பல்லி	சிலந்தி
கத்தி	வண்டி	வியாழன்

இந்தியா மந்திரி   தயிர் சாதம்

மயில் விசிறி   கவி பாரதி






ஈ மீன்

ஈ மீ

தீபம்	ஈசல்	தீபாவளி
கீதம்	சீவல்	நீதிபதி
வீரம்	வீரன்	தண்ணீர்
நீளம்	நீலம்	பன்னீர்

ஈச்ச மரம் நீராவிக் கப்பல்
மீதி சீவல் பன்னீர் மணம்
நீல நிறம் தீபாவளி தினம்
கீரி வால் ஈயக் கிண்ணம்





உ ர ல்　　　　கு ர ங் கு

உ　　　　கு


உதடு	உலகம்	குயவன்
குண்டு	கருடன்	குங்குமம்
குறடு	குஞ்சம்	முள்ளங்கி

வள்ளிக் கிழங்கு

மஞ்சள் குங்குமம்

இரும்புக் குண்டு

குட்டி முயல்







பந்து புலி

து　　　　பு

உப்பு	சுளுக்கு	உளுந்து
சுக்கு	துடுப்பு	துணுக்கு
நுங்கு	முறுக்கு	மருந்து
யுகம்	பருப்பு	குறும்பு

புளிய மரம்	சுக்கு மருந்து
புலி ஆட்டம்	விறகு கட்டு
துவரம் பருப்பு	உப்பு வண்டி
நுங்கு வாங்கு	குறுக்கு வழி





ஊ ஞ் ச ல் தூ ண்

ஊ தூ

ஊ தல் ஊ க்கம் பர னூர்


தூபம் தூக்கம் கண் ணூர்


பா லூர் அய லூர் நூ தனம்

ஊஞ்சல் சங்கிலி ஊசி நூல்

பா லூர் வண்டி கல் தூண்

அய லூர் மாடு ஊ தல் ஊ து







பூட்டு கூண்டு

பூ கூ

கூனன்	சூரியன்	பூச்சி
மூக்கு	மூங்கில்	பூரான்
சூரன்	தஞ்சாவூர்	குண்டூர்

பூட்டு சாவி	மூங்கில் தட்டு
பூரான் கடி	சூரிய உதயம்
கிளிக் கூண்டு	தஞ்சாவூர் ரயில்





எலி செடி


எ செ


எருது	செக்கு	வெல்லம்
பெட்டி	தெற்கு	நெருப்பு
மெட்டி	நெசவு	தெப்பம்

வெல்லக் கட்டி தெற்கு வீதி

செக்கு மாடு எலி திருடும்

வெள்ளி மெட்டி நெருப்பு சுடும்





ஏ ணி　　　　　　தே ள்

ஏ　　　　　　　　தே

ஏர்	சேவல்	ஏ ற்றம்
வேலி	தேசம்	மேட்டூர்
கேணி	நேரம்	தேங்காய்

முள் வேலி　　　　கேணி நீர்

வெட்டி வேர்　　　சேவல் பந்தயம்

வேப்ப மரம்　　　நமது தேசம்






ஐந்து கை

ஐ கை

நாரை	கழுதை	இராட்டை
பூனை	குதிரை	வைகாசி
வீணை	தவளை	கலப்பை

கூரை வீடு	ஐப்பசி மாதம்
மண் பானை	குதிரை வண்டி
பாலை வனம்	தென்னை மரம்

பூனை பால் குடிக்கும்.
நாய் வாலை ஆட்டும்.
குதிரை வண்டி இழுக்கும்.






ஒட்டகம் கொக்கு

ஒ கொ

சொம்பு கொம்பு கொட்டை
பொட்டு தொப்பி தொட்டி
ரொட்டி நொண்டி மொக்கு

கொட்டை முத்து நொண்டி மாடு
ரொட்டித் துண்டு கொம்புத் தேன்
பொங்கல் பானை நொச்சி இலை





ஓணான்   கோழி

ஓ   கோ

ஓலை	சோப்பு	கோதுமை
மோர்	சோளம்	மோதிரம்
தோடு	கோட்டை	கோதாவரி
போளி	கோலம்	தோரணம்

வைர மோதிரம்

கோலம் போடு

கோழி காலையில் கூவும்

மோட்டார் வண்டி ஓடும்





ஔவை	வெளவால்

ஔ	வெள

கௌளி	ஔடதம்
மௌனம்	பௌர்ணமி
கௌதாரி	கௌதமர்

கௌரி விரதம்	மௌன வாசிப்பு
கௌளி சொல்	ஔவைப் பாட்டு


வௌவால் இரவில் பறக்கும்.
கௌதாரி கூட்டமாய் வாழும்.
மௌன வாசிப்பு பழகு.



அணிலும்
ஆடும்
அ, ஆவாம்.




இலையும்,
ஈயும்
இ, ஈயாம்.



உரலும்,
ஊசியும்
உ, ஊவாம்



எலியும்,
ஏணியும்
எ, ஏயாம்.



ஒட்டகமும்,
ஓடமும்
ஒ, ஓவாம்.



1. சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா ;
வண்ணப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

2. கொத்தித் திரியும் அந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா ;
எத்தித் திருடும் அந்தக் காக்கை—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

—பாரதியார்

உயிர்மெய்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

எழுத்துக்கள்

எ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்

மௌன வசிப்பு.

கீழுள்ளவற்றை மௌனமாகப் படித்து படத்தில் காட்டியிருப்பதுபோல் செய்.

படிக்கும்போது உதடு அசையக் கூடாது.



1. எழுந்திரு
வலம் திரும்பு



2. உட்கார்
இடம் திரும்பு



3. நடந்து செல்
வேகமாய் நட



4. புத்தகம் எடு.
குனிந்து நில்

கிழமைகள்	மாதங்கள்
1. ஞாயிறு	1. சித்திரை
2. திங்கள்	2. வைகாசி
3. செவ்வாய்	3. ஆனி
4. புதன்	4. ஆடி
5. வியாழன்	5. ஆவணி
6. வெள்ளி	6. புரட்டாசி
7. சனி	7. ஐப்பசி
வாரத்திற்கு	8. கார்த்திகை
7 நாள்	9. மார்கழி
வருடத்திற்கு	10. தை
மாதம் 12	11. மாசி
	12. பங்குனி

சித்திரை மாதம்	வருடப் பிறப்பு
புரட்டாசி மாதம்	ஆயுத பூஜை
ஐப்பசி மாதம்	தீபாவளி
கார்த்திகை மாதம்	கார்த்திகை தீபம்
மார்கழி மாதம்	திருவாதிரை
தை மாதம்	பொங்கல்

கொண்டு வா!



காக்கா !
கண்ணுக்கு மை
கொண்டு வா.

குருவி !
கொண்டைக்குப்
பூ கொண்டு வா.

கிளியே !
கிண்ணத்தில் பால்
கொண்டு வா.

கொக்கே!
குழந்தைக்குத்
தேன் கொண்டுவா.



தெரிந்துகொள்



பழக் கடை.

இங்கு பழம்


விற்கிறார்கள்.



துணிக்கடை.

இங்கு துணி

மிக மலிவு.




மாவு இயந்திரம்.

இங்கு மாவு

அரைக்கிறார்கள்.

தெரிந்துகொள்



செக்கு மேடு.

எண்ணெய்

ஆட்டுகிருன்.



மிருக சாலை.

வேடிக்கை

பார்க்கலாம்.




காந்தி பார்க்கு

காற்று

வாங்கலாம்.

பிள்ளைகள்


அணிற்பிள்ளை



கீரிப்பிள்ளை



தென்னம்பிள்ளை



குஞ்சுகள்



குருவிக் குஞ்சு




கோழிக் குஞ்சு



காக்கைக்குஞ்சு

குட்டிகள்



ஆட்டுக் குட்டி



பூனைக் குட்டி




நாய்க் குட்டி

வடமொழிச் சொற்கள்

ஜ ஷ ஸ ஹ க்ஷ — இந்த ஐந்து எழுத்துக்களும் சாதாரணமாகத் தமிழில் உபயோகிக்கப்படுகின்றன. இவைகளை வடமொழி எழுத்துக்கள் என்றும் சொல்லுவது உண்டு. கீழே வடமொழி எழுத்துச் சேர்ந்த வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வடமொழி எழுத்து சேர்ந்த வார்த்தை	சேராத வார்த்தை.
ஜவஹர்லால்	சவகர்லால்
ஜனவரி மாஸம்	சனவரி மாசம்
ஜயம்	சயம்
ஜீவன்	சீவன்
பக்ஷி	பட்சி
பக்ஷம்	பட்சம்
ராஜாஜி	ராசாசி
ஸஹோதரன்	சகோதரன்
புஷ்பம்	புட்பம்
ஹரிகிருஷ்ணன்	அரிகிருட்டினன்



கை வீசம்மா

கை வீசம்மா கை வீசு.
கடைக்குப் போகலாம் கை வீசு.
மிட்டாய் வாங்கலாம் கை வீசு.
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு.
சொக்காய் வாங்கலாம் கை வீசு.
சொகுசாய் நடக்கலாம் கை வீசு.



காய் கறிகள்

தேங்காய்	மாங்காய்
வாழைக்காய்	பாகற்காய்
கத்தரிக்காய்	பூசனிக்காய்
மிளகாய்	வெண்டைக்காய்

மாங்காய் புளிக்கும்	மிளகாய் உறைக்கும்
பாகற்காய் கசக்கும்	தேங்காய் தித்திக்கும்

படத்தில் இவைகளைப் பார். இவைகளைப் போல் புடலங்காய், முருங்கக்காய், பூசனிக்காய், அவரைக்காய் முதலிய காய்கறிகள் உண்டு.

பொங்கல் பண்டிகை


தை வந்தது ! வழி பிறந்தது !
பொங்கலோ ! பொங்கல் !
பொங்கலோ ! பொங்கல் !
என்ன பொங்கல்? மாட்டுப் பொங்கல்
என்ன மாடு? வண்டி மாடு
என்ன வண்டி? கட்டை வண்டி
என்ன கட்டை? விறகு கட்டை
என்ன விறகு? மா விறகு
என்ன மா? அம்மா

நற்பழக்கம்

குப்பை
மலம்
சகதி
} இவற்றின் மேல் நடக்காதே

எச்சில் கண்ட இடங்களில் துப்பாதே.

சுதந்தரப் பள்ளு



ஆடுவோமே பள்ளு
பாடுவோமே !
ஆனந்த
சுதந்தரம்
அடைந்து விட்
டோமென்று
(ஆடுவோமே)
எங்கும் சுதந்தரம்—
என்பதேபேச்சு-நாம்
எல்லோருஞ் சமமென்ப
துறுதியாச்சு !



சங்கு கொண்டே
வெற்றி
ஊதுவோமே-
இதைத்
தரணிக் கெல்லா
மெடுத்து
ஓதுவோமே
(ஆடுவோமே)